ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

மயில் ராவணன்

சரித்திரத் திருப்புகழ்ச் சிந்து.

காவடிச்சிந்து வர்ணமெட்டு.



கும்பகோணம் புஸ்தகஷாப் காயண விகடவேசரி என்னும்

கே-வீ-கதிர்வேல் பிள்ளை அவர்களால்

இயற்றியது

பெ. ஆறுமுக முதலியாரால்

பிரசுரிக்கப்பட்டது

சென்னை:

இதன் விலை] 1911. [அணா 2.

Registered Copy Right

சென்னை, முரஹரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீராமஜெயம்.

மயில்ராவணன் சரித்திரத் திருப்புகழ்ச் சிந்து.

காவடிச்சிந்து வர்ணமெட்டு.

இவை
கும்பகோணம் புஸ்தகஷாப்
காயனை விகடகேசரி யென்னும்
கே. வீ. கதிர்வேல் பிள்ளை அவர்களால்
இயற்றியது.

மேற்படி ஊர் புஸ்தகஷாப்
கோ. சீனிவாச பிள்ளை அவர்கள்
விருப்பத்தின்படி,

பொம்பூர்,
ஆறுமுக முதலியாரால்,
சென்னை:
முராஹரி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

முதற் பதிப்பு.

ரிஜிஸ்டர்] 1917. [காபி ரைட்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், மயில்ராவணன் சரித்திரத் திருப்புகழ்ச் சிந்து என்னும் புத்தகத்தை வெண்தமிழ் நடையாக காயனை விகடகேசரி யெனனும் கே. வி. கதிர்வேல் பிள்ளை அவர்களால் எழுதினதை பெரம்பூர்-ஆறுமுக முதலியாராகிய எனக்கு சகல சுதந்திரம் கொடுத்து விட்டபடியால், இதை என் அநுமதியில்லாமல் இதரமானவர் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதென கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காப்பிரைட் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,

பெரம்பூர் - ஆறுமுக முதலியார்.

ஸ்ரீராமஜெயம்.

மயில்ராவணன் சரித்திரத் திருப்புகழ்ச் சிந்து.

காவடிச்சிந்து வர்ணமெட்டு.

விநாயகர் துதி.

வெண்பா.

ராமநாம முச்சரிப்போர் நரகவேதனை தவிர்க்கும்
எமவாதனைப் பிறவியறுக்கு மிப்புவியில்—நேமமதாய்
மயில்ராவணன் சரித்திரத்தை மாநிலத்தில் தான்புகழ
கயிலைமலை கணபதியே காப்பு.

... THE REGISTRAR ...
JUN 1917
48

விநாயகர் துதி.

ஆவலுற என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

இராகம்-சவாய்-தாளம்-ஆதி.

விநாயகா விண்ணோர் மண்ணோர் புகழும் நாயகா
வேழமுகனே யாழிதரின்றோன்
வாழிமகிழ் வென்றுறுமருகா (விநா)

வேண்டினேனே யுன்னை ஆண்டருள்வாய் முன்னே
காண்டிபனுமே நீண்டிடதித்த
தாண்டவமூர்த்தம் ஆண்டவன்மகன் (விநா)

ராமன் சரித்திரத்தை நேமமிர் தாகமத்தை
தாமதமன்றி மாமூல்படியே
நாமுனை வேண்ட சேஷமமேதா. (விநா)

மயில்ராவணன் திரேகத்தை மடித்த சரித்திரத்தை
மகிமைபாசகவே பக்தமகிழவே
நாசர்புகழவே குசனுக்குமுந்திய (விசா)

ஸ்ரீராமர் துதி.

திருப்புகழ் வங்காரமார்பிலணி என்ற வர்ணமெட்டு

சிங்காரமா அயோத்தி தெசரதர்க்கு பாலனுகி
செங்கோல் முறைதவறி சிற்றன்னையால் கானகத்தில்
தங்கியே சித்திரகூடந் தானிருந்தீர் பஞ்சவடி ஸ்ரீராமா

அர்ப்பகர துஷணர்கள் ராக்ஷதர்கள் யாவர்களும்
சூர்ப்பனகி மொழியினுலே இறந்தார்கள் இப்புவியை
தர்ப்பரனே ஜடாயுக்குநீர் சாயுச்சிய பதவிதந்தீர் ரகுராமா

அக்கால மாவனத்தில் ஆஞ்சநேயர் தன்னைகண்டு
சுக்கிரீப னுக்குதவி செய்யும்படி யாகவின்று
அக்கிரமம் செய்தஅந்த வாலியிட மார்பிளந்த பரந்தாமா

வாருதியை தாண்டிநல்ல வண்மையுள்ள சீதைதன்னை
மாருதியும் தானுங்கண்டு மகிழ்ந்தந்த பூர்த்தகணம்
போரதிக மாகசெய்த அதிவனை நீண்டசில ஜெயராமா

அங்கதனும் நீலனுடு ஜாம்புவனும் நளனுடனே
பங்கமில்லா பணைகள்கட்டி பங்குவெகு வானரர்கள்
பொங்குகடலின் தென்பதுபோல் இவ்வகையும் சேனையு
டன் கோதண்டராமா

ஜம்புமாலி மகோதரனும் தானேயதி காயனுடன்
கும்பகர்ணன் இந்த்ராஜித்து கூடவே திரும்பினுமே
தெம்புடனே கோதண்டத்தால் பம்பரம்போ லாட்டிவைத்த
சீதாராமா

ஆஞ்சநேயர் துதி.

திருப்புகழ் மலாடிவயிற்று என்ற வர்ணமெட்டு.

அஞ்சனை தனையா டனுமானே நீர்
ஆதரிப்பீரென்னை கன்வானே அந்த
அரகரசிவனிட புதல்வோனே காருங் குணவானே
சுக்கிரீபன்வாலிக்கி மந்திரியே வெகு
சூட்சங்கள்கற்ற தந்திரியே நீ
முக்கியமாயென்னை யாதரியே யஞ்சா மாருதியே
சஞ்சீவிஜாம்புவன் மொழிகொண்டு நீர்
அஞ்சலித்தீர்மலை தான்கண்டு அங்கே
பஞ்சாகமிந்ரஜித்து யாகஞ்சென்று அழித்தீர் நீர்கொண்டு
அங்குதன் லட்சுமணரை யெடுக்க நீர்
அப்போதுராமரை தான்தூக்க கொடி
லெங்கையில்விபீஷணர்க்குபறக்க கதிர்வேல் பதஞ்சிறக்க

இராவணன் லங்கையில் மந்திரிகளுடன் யோசனை தர்க்கம்.

காவடிச்சிந்து மஞ்சு[illegible]கர் என்ற வர்ணமெட்டு.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

இராவணன்.

என்னசெய்வேன் சொல்லுமந்திரி
யினிநானுப் [illegible]பாவர்ந்தானும்
யிறந்தனரே ராமனால்தந்திரி யிப்போ
யென்தன் தம்பியும் மைந்தர்யாவரும்
இந்திரஜித்துமே நொந்துமாண்டிட்டார்
எதுயோசனை நீர்சொல்லுமே
யிப்போதுதானே செப்பிடதோண
யிந்தராமனை நான்வெல்லுமே.

மந்திரி.

உந்தன் தம்பி பாதாளலெங்கை
மயில்ராவணன் மாபகெம்பீரன்
உகந்தழைப்பீர்; நீருமேயிங்கே வெகு
உள்ளாகுது கள்ளமுள்ளவர்
அல்லிபேரையும் அப்போதெகொல்வார்
உற்றுமே நினைத்திடுமையா
யோசனைவேண்டாம் மோசமேஉண்டாம்
உற்றராவண யிருபதுகையா.

மயில்ராவணன் சொல்லல் தர்க்கம்.

ஷை வர்ணமெட்டு.

மயில்ராவணன்.

அண்ணனேது யெனனைதானுமே
அழைப்பது நினைப்பது
ஆதரவு ஒன்றும்காணேமே நரன்
அதிசீக்கிரமாய் பதிதன்னைவிட்டு

குதித்துவந்தேனே குறையெனவெனை
அன்புடனே நீருமிப்போது
சொல்லுவீரே நல்லிசையாய்
அப்படியே செய்கிறேனேது

இராவணன்.

ராமலட்சுமணர் என்னும்மனிதர்
வானரருடன் வேணைபோர்வந்து
நாடெல்லா மழித்தாரிருவர் சேனை
காடிஜம்பு மாலிமடி இந்திரஜித்து
கோடிராக்ஷதர் ஜாடிமாண்டாரே
நானுமொண்டி தானேயிப்போது
யென்செய்வது நீதானேயோது
நறுக்கியே கொன்றிடசெய்குது.

மயில்ராவணன்.

இன்றுபதி சேர்ந்துகாழிக்கி
யிருவர்களே யெடுத்துபோயி
யிடுவேனேபலித்தான் காளிக்கி நீர்
எள்ளளவேனும் உள்ளந்தனிலே
அல்லல்வேண்டாம் இதேசத்தியம்
இப்போதேநான் சென்றுவருவேனே
கட்டத்தாலே யென்றன் கையிலே
யெடுத்துமே சென்றுகொல்லுவேனே.

இராவணனிடம் மயில்ராவணன் வந்து பேசிய சங்கதியை திரிசடை வாயுபகவானிடம் சொல்லி விபீஷணனிடம் சொல்லச் சொல்வது

வாயுபகவான் சொல்லும் விருத்தம்.

தாள வெல்லைமயில்ராவணனும் பத்துதலையுடைய
நானே கொண்டு சிறையினில்வைத்த பெண்ணுனேப்பெற்ற
தாலே கேட்டேன் இன்று பதினைந்துநாழிகை காளிகோவிலிலே
ராமலட்சுமணர்யிருவரை தாக்கியேபலிதருவேனென்றான்.

விபீஷணர் கேட்டு சுக்ரீபன் அனுமார் ஜாம்புவான் முதலியவர்கள் யோசனை.

திருப்புகழ் இசைந்தயேறு என்ற வர்ணமெட்டு.

சுக்கிரீபனே வானரர் அரசனே சொல்வேனே கேளு.
சூதுசெய்து மயில் ராவணன் தூக்கி செல்வானே
முக்கியமாய் ஆஞ்சநேயர் வால்கோட்டை கட்டும். இங்கு
உள்ளவானரர் எல்லாமதற்குள் பூட்டியே
அக்ரமமான சூதுவாதுமவன் கற்றவன் இங்கு
அணுகாமலே மாருதியேகாவல் உற்றவனா
தாக்கிதைசெய்து விபீஷணர்சுக்ரீபன் சேனையோ வெகு
தந்திரமாய் வருவான்உஷார் அவனை தடுக்கு

மயில்ராவணன் இராமலட்சுமணனை யெடுத்துவருவதற்கு மந்திரி நால்வருடன் புறப்படும் சமயம் தனக்கும் தன் பத்தினி வர்ணமாலிகைக்கும் தர்க்கம்.

காவடிச்சிந்து வெள்ளிமலையோத்தபல என்ற வர்ணமெட்டு.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

வர்ணமாலிகை.

எங்குபோரீர் வேகமாககோதா நீர்
எந்தனுக்கு சொல்லுமேசமேதா ராஜ
சிங்கம்போலவேகர்ச்சித்து அங்கில்லுகையுடனே
தானே கேட்டேனே.

மயில்ராவணன்.

அண்ணன்ராவணன் மொழியைக்கொண்டு சென்று
அந்தராமன் லட்சுமணனைக்கண்டு இப்போ
இன்னமாய் காணுமேசென்று இறைக்க கொண்டுவருவேன்
பாரு நீயும் தேரு.

வர்ணமாலிகை.

வைகுந்தவாசனை மந்தராமனை இப்போ
வந்தார்புவி பாரக் கீர்க்கமூமனை இந்த

[illegible] புகழும்லட்சுமி தையலாள் சீதையெடுக்க
போமா அதி தூமா,

மயில்ராவணன்.

போடிபோடி பெண்களிடபுத்தி யெனக்கு
[illegible]கட்டுறதும் கேழ்ப்பேனோடி வித்தி யிப்போ
டிடியே யிருபேரையும் தேடியே கொண்டுவருவேன்
நானே யிப்போ தானே.

வர்ணமாலிகை.

மானிடர் யிருவரென யெண்ணி நீர்
மடிந்திட காலமது நண்ணி யென்
மன்னனே போகவேவேண்டாம் விண்ணவர் மகிழுமதி
தீரா தெம் பிரா.

மயில்ராவணன்.

புத்திகெட்டமாதே தடுக்காதே நான்
வெற்றியடைவது யிப்போதே அங்கு
சத்தியே மந்திரிகால்வர் புத்தியில் சிறந்தவரும்
நானும் அவர் தானும்

மயில்ராவணன் விடைபெற்று வந்து மந்திரிகளில்
சையித்தியனை அனுப்ப அவன் மூகம் தேய்ந்துவர
அனுமார் வால் கோட்டையில் தான்போவதாக
விபீஷணர் வேடம்பூண்டு வருவது.

காவடிச்சிந்து கண்ணாயிரம்படைத்த என்ற மெட்டு.

ராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

[illegible]லங்கொண்டு யந்த வால்கோட்டை தாண்டி
யெடுத்திடுவே னிருபிடித்து மனுஷரை
பெட்டியில் நான்

செடுத்திடுவே னிவர் படுத்தபடியே வெகு
முக்கடியில்
கல்கோட்டைபோலே வாரால் வில் கோட்டைகட்டிருக்க
கணமுடன் விபீஷணர் குணவந்தன் போதுள்ள செல்லுமே[n]
இன்னை தினமதில் பதினைந்து நாழிகைக்கி உயிர்
கொல்லுவேன்
பெட்டிதன்னிலே வைத்து யட்டியில்லாமல் தூக்[கி]
பெருமையுட னிருவர் யருமையாக யெடுத்து
கொண்டுமே நல்ல
திரமையாக பாதான பெருமையாகவே செல்வேன்
யின்றுமே
காளி கோவிலில் வைத்து நாழி பதினைந்துக்கு
கழுத்தை வெட்டியே பலிவிழுத்திடுவேன் தலை
யின்றுமே நான்
யிழுத்துமே லெங்கை வேந்தன பழுதில்லாயலிருக்க
நன்றுமே
யிழுத்துமே லெங்கை வேந்தன் பழுதில்லாம லிருக்க
நன்றுமே

மயில்ராவணன் பாதாள லெங்கை காளி கோவிலில்
ராம லட்சுமணனை கொண்டு வைக்க
ஆகாயவாணி சொல் விருத்தம்.

சொர்க்கமே யீதும் ராமன் சுந்தர தம்பியோடு
அக்ரமம மயில்ராவணன் அலுலிபே யெடுத்தாலே
சற்குணத் தூாதண்டி நாயகிமைந்த நீலன்
பக்குவமான லங்கை பாதாளம் யாருவாலே

ஆகாயவாணி சொல்லைக்கேட்ட மயில்ராவணன்
சாரதண்டி நீலமேகனுக்கு விலங்கிட்டு
காராகிரகத்தில் வைதான்
அனுமார் மோசம்போனேனென்று விபீஷணரிடம்
சச்சமைப்போலவந்து யெடுத்துபோய் விட்டா
னிப்பாவி யென வருத்தப்பட்டு
பாதாள லெங்கைக்கு வருவது.

திருப்புகழ்-தோங்கிசரி என்ற மெட்டு.

விபீஷணரே சென்று வாரேன் யிங்குத்தானே
யிருப்பீர் நீரே நாம் சொன்ன
விதப்படி நான் போறேன் அய்யனை
கொண்டு வாறேன்

நானுமே மோசம் போனேன் பாவியாகி
நாதனை துறந்தேனே யங்கு செல்ல
நாடினேன் கடல்தானே தாமரை
தண்டில் போனேன்

கோட்டைமேலே அரக்கர் யிருந்துமே
கூச்சலிட்டு யிருக்க யவனிடம்
கோபமாய் வால் முருக்க இருவருக்கும்
சண்டை பெருக்க

மச்சவல்லபன் பாரு அனுமானுட
மெத்தப்படி சிறு உத்தங்கள்
யாச்சுதே வெகுவேகு மடிந்தார்
சிலபேரு

அனுமார் விருத்தம்.

மச்ச வல்லபன் வாலினார் மாருதி தானும் கேட்டு
பச்சமாய் மகனென்றெண்ணி பருகியே உச்சி மோந்து
அச்சதனுன் ராமன் யங்குள்ளே யிருப்பதாலே
இட்சணம் விடையீகுவாம் யெடுத்துமே வருகுவேனே,

மச்சவல்லபன் விருத்தம்.

சடலினில் நான்பிறக்க கார்த்தமே யென்னை யிங்கு
உடலது பூரிக்கவே உணவது கொடுத்து யாண்ட
மடலது யருமை பெற்ற மயில்ராவணனுக்கு தீங்காய்
இடமது தந்தால் பாபம் யேகாதிர் பிதாவே சொன்னேன்.

ஆஞ்சநேயருக்கும் மச்ச வல்லனுக்கும் தர்க்கம்.

சமத்தத்தன இந்துஸ்தான் மெட்டு.

ம. பிடித்து யடித்து விடுத்து மடித்து
பிணமாய் செய்து போமே நல்ல
பெருமை யுண்டாமே

அ. அடித்து மடிக்க வல்லியே
விடுக்க மனமும் மில்லையே

ம. படுத்தேன் மார்பில் மிடித்து குத்தி
பாய்ந்து யங்கு செல்லுமே இந்த
வாய்ந்தநகரை வெல்லுமே

அ. துடுக்காக நான் செய்வது
பொல்லா பாபமே

ம. விடுத்தாலே நம்பிக்கை
போச சாபமே நல்ல
பிடித்து யடித்து விடுத்து மடித்து
பிணமாய் செய்துபோமே நல்ல
பெருமை யுண்டாமே

அநுமார் மச்ச வல்லபனை மார்பில் குத்திவிட்டு உள் பிரவேசித்து செங்கல் கோட்டையிலுள்ள ராக்ஷதர்களை கொல்லுவது

திருப்புகழ் மலடி வயிற்று மெட்டு

செங்கல்கோட்டை தனில்வந்து அநுமார்
அங்கொரு மரத்தை பிடுங்கெடுத்து நின்று
அங்கி ராக்ஷதரை தானரைத்து விரைந்து மிக
கை கால் முரித்துதான் விழ ராக்ஷதர்
கெதியென புரண்டு தானழ யந்த
அய்யன் மாருதியை தொழ வெகு
ஜன மீழ
ராமனை வேண்டி பாக்கியமே யிவர்களை
நருக்குவதே இலக்கியமே விஸ்வரூபம்
நாமே யெடுப்பது யோக்கியமே நல்ல
வியாக்கியமே

அநுமார் தங்ககோட்டையில் உள்ள ராக்ஷதரை வதம் செய்து நந்தவனம் தடாகக்கரை ஓரமாய் மரத்திலிருப்பது.

மயில்ராவணன் அதிக நேரமானதுயென்று நாகண்டிகையை தண்ணிகொண்டுவர சொல்லுதல் தாக்கப்.

திருப்புகழ்-பார்திமதியணி மெட்டு.

மயில்ராவணன்

காணிதேவிக்கி யின்னுளிதனில் பழி
காலமதுவாகும் நாரகண்டி
கடிகில் சென்றுமே குடத்தில் தண்ணிரை
கொடியில் கொண்டுநீ வருவாயே

117
சென்னை-600 003

ஆரதண்டிகை.

பாவிநான் திரு.பாலன் நீலமேகன்
பற்றியக்கு வெட்ட வோ தானோ

ஆரதண்டிகை.

பாவிநான் திருபாலன் நீலமேகன்
பற்றியக்கு வெட்டவோ தானோ
பாருயென் கையினில் விலங்கு யிட்டீரோ
பாதம் பணிகிறேன் அண்ணாவே

மயில்ராவணன்.

ஜாலி உனையல்ல ராம லக்ஷ்மணை
சாமிதனை வெட்ட யிப்போதே
சமுத்திரில்சென்று தண்ணீர் கொண்டு வா
சமையமிதுவே ஆரதண்டி

ஆரதண்டிகை.

மாவிகும்பகர்ணன் மன்னன் யிந்திர சித்தை
மடித்த செருபதி தன்னையே
மங்கைகாளிக்கி யின்று வெட்டவே
மதித்து சொன்னீரோ அண்ணாவே

நந்தவனம் குளக்கரையில் வந்து ஆரதண்டி புலம்பல்

கற்றூர்க்கு என்ற மெட்டு.

பாவி மயில் ராவணனும் பழிசெய்ய கொண்டு வந்தான்
ஆவி பதர்க்குதவி யான அயோத்தி யாழ் ராமா
தம்பி லெட்சுமணை ருடனே தானுமிந்த காளியர்க்கு
தலையறுத்து விடவே காலம் தானுமாச்சே ராமா
எத்தனை சேனைகளையும் யிருத்திய உனை யெடுத்து
புத்தியில்லா பாதகனும் சத்திகொய்ய போறான் ராமா

ஆரதண்டி விருத்தம்.

வானரர் சேனையும் லெங்கையில் வந்துமே
வாட்டியே நின்றேனுக்கு

வானரர் தன்னி லெவருவானி யில்லையா
வந்து உந்தனை காக்கவே
வானரர் மந்திரி மாருதி யென்றவர்
வையகம் மெச்சும் தீரன்
வானரர் யெல்லாம் விட்டெறி யிந்த
மாபாவி கையால் மாளவோ

தாரதண்டி புலம்பும்போது அனுமார் வந்து கேழ்ப்பது தர்க்கம்.

ராகம்-கமாஸ்-தாளம்-ஆதி

காவடிச்சிந்து பாளைவாய் என்ற மெட்டு.

அனுமார்.

பெண்ணே யினி யிப்படியே
கண்ணீர் நீர் விட்டழுகிறாய்
தண்ணிகொண்டு போகாதேலே நின்றமே-அந்த
யென்னிராம லெட்சுமணனை யின்றமே

தாரதண்டி.

ஆரோ யிங்கு சோலை தன்னில்
ஆளைப்போல பேசறது
அந்தமயில் ராவணனின் மாய்கையோ-நான்
இந்தயிடம் வந்து பார்த்த செய்கையோ

அனுமார்.

மாதேயந்த ராமதூதன் மாருதியும் நானே தானே
மைந்தனும் புந்தனை காப்பார்த்துவேனே நீயா
இந்த ஊரையாள நானும் செய்வேனே

தாரதண்டி

சின்ன குழந்தை போலே
என்முன்னே தான்வந்து நின்றே யங்கு
சேதித்தீர் சகலகோடி ராக்ஷதர் தாம்
பேதித்தீர் கோட்டையெல்லாம் பாதகர்

அனுமார்.

அஞ்சாதே நானே யனுமான்
அப்போதே விஸ்வரூபம்
வஞ்சியர் முன்னேதான் காட்டவே தன்
நெஞ்சினில் நினைந்தபுகழ் பூட்டவே

தாரதண்டி.

பத்தாவை கென்றுமே யெந்தன்
பாலனும் யெனக்கு அவன்
பாவியும் விலங்கு யிட்டான் அய்யனே-அவன்
ஆவியை போக்கியே காப்பீர் மெய்யனே

அனுமார் விருத்தம்.

நீரமாய் யென்னைத்தானே நீர்த்ததன் குடத்தில் உள்ளே
போரனி உந்தன்பின்னே புலப்படாமலேதான் வைத்து
வேறொன்றாம் கேழ்க்கவில்லை விழுந்நகர் மாங்கொத்தினில்
ஓரமாய் தங்கிவாறேன் யோகிவாள் வேகமாக.

தாரதண்டி விருத்தம்

ஈசனை வேண்டிநல்ல விதமுள்ள வரமும் பெற்று
வாசமாம் பாதாள லெங்கை வாழ்ந்தெதிரி யில்லாமலே
யோசனை நீர் சொன்னீரே யுனது வார்த்தைபோல் செய்தால்
நாசமும் படைவேன் தாலாநத்தி[illegible] வாசல் தன்னில்.

தாரதண்டிகை நீர்குடத்தில் மாங்கொத்தில் அனுமார் செல்ல தாலாவாசல் சென்று விஸ்வரூபங் கொண்டு ராக்ஷதாளை கொல்லுவது.

வலதப்பிய என்ற மெட்டு.

ராகம்-நாதநாமக்கிரிகை-தாளம்-ஆதி.

வாங்களடா வெகு ராக்ஷதரே உன்னை
வாட்டி யெமலோகம் பெட்டியனு பாரே

போக்கியே யம்புகள் தாக்கியே யென்புகழ்
யொன்று யொன்று விட்டு யின்று மடிப்பேனே (வாங்)

அம்புகள் கொண்டு அடித்திடிர் இந்த
ஆகாசத்திலே விடுதிடீர்
பம்பரம்போலே சும்பத்தி னாலே
பறைத்து குதித்து மடித்திடுவேன்-நீங்கள் (வாங்)

மூண்டடம் தலைகள் தனித்தனியாய் எங்கும்
கண்ட யிடத்திலும் தான் மினியாய்
அண்டமுடியில் பிறவாகம் போலே ரத்தம்
அங்கு மிங்குமே தங்கியோடியிட (வாங்)

பார்த்தாயோ பெண்ணே தாரதண்டி என்
பராக்கிரமமெல்லா நீனே கண்டி
கருத்தான மந்திரி கடகராஜன் விட்டை
காட்டுவாய் தீட்டுவேன் வாலினால் கட்டுவேன் (வாங்)

ஆஞ்சிநேயர் கடகராஜனை கட்டிவிடுத்து விட்டு நீலமேகன் விலங்கை தரித்து தனியாய் இருக்கசெய்து ஆசிர்வதித்து ராமலெட்சுமணனை பார்க்க செல்லல் நீலமேகனுக்கு ஆஞ்சநேயருக்கும் தர்க்கம்.

திருப்புகழ் வங்கார என்ற மெட்டு.

ஆஞ்சினேயர்.

ஆங்காரமுள்ள மயில் ராவணனை கொன்று நாளும் அவன்
தங்கையாம் தாரதண்டி தன்மகன் நீலமேகனுக்கு
லெங்காபுரியை முடிசூட்டியே செல்லுவேனே-யினிநானே

நீலமேகன்.

சிங்காரமான ராமலக்ஷ்மணனை சென்று நீயும்
அங்கே யெடுத்து சென்றால் யப்போது யென்னசெய்வோம்
செங்கோல் கொடுத்து முடிசெய்வது யெக்காலம் நீர் சொல்லும்

ஆஞ்சினேயர்.

இங்கள் வதனமுள்ள சிறுவனே கேள் நீலமேகா
தங்களுக் கபயஸ்த்தம் தானுமே நான் கொடுத்தேன்
அங்கே நான்சென்றுமே அருகினில் நான் வருவேன்
இப்போதானே

நீலமேகன்.

எங்களை தேடிவந்து இவ்வேனே தான் பழிகள்
என்னுன் செய்வதப்பேர யென்னையாரு மாருதியே
தங்கிறல் நீருதனிதானிருக்கும் எங்களுக்கு வணங்கினேனே.

ஆஞ்சிநேயர் காளிகோவில் கதவை ஒடைத்து உள்பிரவேசித்து ராமா லக்ஷ்மணுளை கண்டு பாடுவது.

காவடி சிந்து பூமிமெச்சிடும் மெட்டு.

ராகம்-முகாரி-தாளம்-அடதாளம்.

பாதாள லங்கை காளிகோவிலரிகில்
சென்றுமே அநுமார் நின்றுமே
கதவை வென்றுமே யங்கு
பார்த்து பார்த்து சுத்தி மண்டபம் வேடிக்கை
காட்சியே கண்காகூதியே,
எத்தனை கோபுரம் சுத்தி மதில்களும்
கண்டாரே சந்தோஷங் கொண்டாரே
உள்ளே சென்றாரே நல்ல
வெத்தி உள்ள ராமனு லட்சுமணர் இருவரை
கண்டுமே தூயர் விண்டுமே.
அந்த பெட்டியோடு எடுத்து வந்து மலையில்
வைத்தாரே குகையில் சேர்த்தாரே
சுத்தி பார்த்தாரே பூமி
இந்த இடத்தினிலிருக்கும் அன்னையை
அழைத்தாரே வாலை வழைத்தாரே.
பூமிதேவியே உன்நாதன் வந்திருக்கார்
பத்திரம் சொன்னேன் ஜாக்கிரம்

உலக நேத்திரம் நான்
நேமமுடன் சென்று மயில்ராவணனை
கொன்று வாறேனே உன்குமாரனே.

கடகன்தேவி சொல்லிய நீதியை அறிந்து
மயில்ராவணனிடம் சொல்லிய மயில்ராவணன்
தர்பாரில் பாடுதல்.

திருப்புகழ் தொந்திசரிய வர்ன மெட்டு.

சபையில் வந்தி ருந்தி மயில் ராவணன்
சகல புகழ்ந்து மிந்தி கடகனை
சனுதி வாடமுந்தி அநுமாரைப்பார்
அலரம் வாசல் முன்னே காவலர்கள்
ஆங்கிருரே பின்னே மகனுடன்
ஆறதண்டி தன்னே கொண்டுவா
என் பின்னே.

கத்தி கட்டாறி கொண்டு நீலமேகனை
கட்டி வாடா சென்று பவன் தாயும்
இத்தை தனிவின்று வெட்டுவேன்
வாள் கொண்டு

கடகன் வந்து தேடி அநுமாரை கண்டு பயந்து
கத்தியை எறிந்து விட்டு ஒளிந்தது.
மயில்ராவணன் காளிகோவிலில் ராம லக்ஷ்மணரை
பார்க்க சென்று காணுமல் பாடுவது.

திருப்புகழ் இசைந்த வர்ன மெட்டு.

சங்கரி சாம்பவி நீலி காளியே உன்னிடம் நான்
சரணம் செய்துவந்த தெங்கே சொல்லு என்னிடம்

எங்கு சென்றாவர் எப்படி போனார் யம்மணி இங்கு
எயர்ரெடுத்தவர் எவரைசொல்லும் கண்மணி
அங்கிருந்த சுதவை ஒடைத்தவர் யாரோ தான் இப்ப
அதனை நாளும் கேழ்க்க சொல்லுமே நீரே தான்
இங்கு உனக்கு பலியிட எடுத்து வந்தேனே நீ
எப்படி விட்டீரோ எவரை நாளும் மனம் நொந்தேனே

நாறதண்டி நீலமேகன் அநுமாரிடம் பேசிகொண்டு இருப்பதை மயில் ராவணன் பார்த்து சேனைகளுடன் உக்ரம்செய்ய ஆரம்பிப்பது.

காவடி சிந்து மேன்ஸிமலே என்ற வர்ண மெட்டு.

ராகம்-காப்பி-தாளம்-ஆதி.

வித்திய சிம்மனே இங்கு வாடா கையால்
குத்தியே தள்ளினேன் மாண்டு போடா இங்கு
சுத்தி சுத்தி ராகூதர் பத்தியாய் வந்தாலும்
விடேனே மூடனே.
கடக ரோமன் என்ற யறக்கர் உன்னை
காலாலே உதைத்தேன் நீ இரக்க கொஞ்சம்
படபடப்பாய் என்னிடத்தில் பாயுரா நீ தானே
போடா குடிகேடா.
வச்சிரசேனன் தேருமேலேறி நான்
வதைப்பேன் ராகூதர் மாளுமீறி அங்கு
அச்சி முறிந்துற தங்கள் பிச்சி எரிந்து
கொன்னுரே அநுமாரே.
குத்தினேன் மயில்ராவணு பாரு மார்பில்
சுத்தியே ரத்தங்கள் பொருயாறு நான்
வெத்தியே படைத்தேனென்று மத்தியிலிருக்கும்போது
கின்றுன் உயிர் கொண்டான்

ஆஞ்சினேயர் நாரதண்டியிடம் மயில்ராவணன் இறந்து மறுபடி யெழுந்து வருகிறுனே அவனை கொல்லவேண்டுமே அதற்கு மார்க்கம் சொல்லுவாய் அதற்கு நாரதண்டிகை சொல்லுதல்.

நொண்டி சிந்து

அரக்கிலிவன் சாலா அந்த
அஞ்சனையாள் யீன்ற குமரா
வாயிருன் நாயகனும் ஒருதினம்
வாரும் விருந்து யென யழைத்து வந்து
பலவித கறிவகைகள் வெகு
பக்குவமாக சமைத்தழித்து
கலவிய சந்தனங்கள் யம்பர்
கலந்து வெகுவாய் பூச தாம்பூலமும்
தரித்து இருக்கும்போது யப்போ
தானே மயில்ராவணன் உயிர் நிலையை
யறிவித்தவிதம் சொல்மேவன் உங்கள்
யடிமை சொல்லுவதை தான்கேளும்
பிர்ம்மாவிடந்தனிலே தவத்தால்
பெருமைபெற தான் வறமும் பெற்று
திருமால் யெவர்களாலும் தனக்கு
தீங்குகள் யில்லாமல் ஆசிபெற்று
ஐபந்து பூதங்களை வண்டாக
அமைத்து விந்தியாசல பருவதத்தில்
அயர்ந்து குகைதனிலே யிருந்திட
அப்போது யொருவர் சண்டை செய்தால்
எந்தனை தான் யிதித்து பர்வதம்
இடத்தியொரு காலை தானுவைத்து
அந்தண்டை பிடித்து கையால்
அசையாமல் கசக்கி யெறிந்து விட்டால்
இறந்து விடுவேனென்று தங்களிட
யியம்பினரே மயில்ராவணனும்

சீரக்தபடி செய்தால் அவனை
நிமிஷத்திலே கொன்று செல்லலாமே தந்த

மயில்ராவணன் ஆஞ்சிநேயருக்கு சொல்வல்.

விருத்தம்.

வாணரு மிங்கே வாடா வாட்டுவேன் யுத்தனை நான்
காணக கனிவகைகள் கண்டுமே தின்னும் பேயா
வானவர் யெவர் வந்தாலும் வதைத்திட முடியா தென்னை
நானுமே மாய்கையாலே நாடுறேன் யெனைப் பார்ப்பாயோ.

ஆஞ்சிநேயர் வெண்பா.

பத்துதலை ராவணனும் பாவியே புத்தன் இறும்
யத்துவிழ வாளினால் யாக்குவேன் பத்தியுமே
புரியும் பணிவ் புவியெல்லாம் கொண்டாடும்
அரிராமன் தன்செயலால் தான்.

மயில்ராவணன் ஆலமரத்துக்குகீழ் விறணையாக செய்து யதிலிருந்து வந்த பூதம் ஆஞ்சநேயரிடம்

தர்க்கம்.

திருப்புகழ்-மலை வயர் என்ற மேட்டு.

ஆஞ்சிநேயர்.

மாயமாம்வந்த படபூதா உன்
மனமெல்லாம் நான் யரியா யிப்போ
மடக்கி குத்துவே பகர்வீதா யிங்கு
முடியாதா

பூதம்.

அனுமான் யென்பவன் நீதானு உன்னை
அணலாய் யெரிப்பேன் பே வாறு என்னை
அரிவாமோ நீ வழிகாணு கெட
வீணு

24

ஆஞ்சிநேயர்.

அய்யா ராமா பெலிக்காரும் வெகு
அக்கினி பகவானே நீர் வாரும் யிப்போ
மெய்யாயெக்தன் [illegible]யர் தீரும் [illegible]ன்முகம்
பாரும்

பூதம்.

தேசேகமெரிய செய்வேனே
நியங்கிமே பங்கு பெய்வே[illegible] நீர்
திரும்பி போகா[illegible]றி உய்வேனே [illegible] கொல்வேன்
உனை நானே

ஆஞ்சினேயர் வருத்[illegible]பட்டு ஆகாயவாணியால் மயில்ராவணன் இருக்குமிடம் தேடி யாகத்தை பயிழ்த்து பூதம் யந்தரலோகம்செல்ல மயில்ராவணனை ஒருகுத்து மூக்கில் குத்த மயில்ராவணன் [illegible]யாய் மறைந்தது.

போது-மயில்ராவணன் விருத்தம்.

மாய்கையினுல் முத்துக்கோட்டை மதிலைவிட்டு வடபுறத்தில்
மாய்கையினுல் வெள்ளி மலையாக மேல்மண்டபமும்
மாய்கையினுல் மலைமீது விருக்ஷமுடன் மதிலிருக்க
மாய்கையினுல் மயில்ராவணன் மாணகில் பொழிந்திட்டானே

ஆஞ்சிநேயர் துரதண்டிகையை அழைத்து கொண்டு பாதாள லங்கை யெல்லாம் தேடி புதிதாயிருக்கும் வெள்ளி மலையை கண்டு மயில்ராவணனேடு சண்டை செய்வது.

காவடிச்சிந்து கண்ணுயிர என்ற மெட்டு.

ராகம் ஆனந்த பைரவி தாளம்-ஆதி.

குத்துகிறேன் மலையில் பித்து விழுரும்படி
குள்ளே யிருப்பவன் புள்ள கடுக்கிட
தானுமே இந்த

க்ள்ள தெனமெல்லாம் பெ[illegible]ள்ளைவ[illegible]கிலும்
தோணுமே
வாடா வெளியே நீய[illegible]மூடா பிதுகள் யெல்லாம்
வல்லவா தனக்கு[illegible]ள்ளதோ நீதான்
சொல்லுமே நான்
சொல்லுவே னிப்போது வெல்லுவே[illegible]னை பாரு
வெளி செல்லுமே.

மயில் ராவணன் மா[illegible]ய்கையாய் மறைந்து
நடுசமுத்திரத்தில் தாப[illegible]ரை தண்டுடன் வழியாய்
தெசமுகனிட செல்ல நினைத்துபோக வாய்வு பகவான்
வழிவிடாததால் மதயானை ரூபங்கொண்டு ஓடுவது
[illegible]மார் எதிர்த்து இருபேருக்கும் தர்க்கம்.

காவடிச்சிந்து ஆறுமுக என்ற வர்ன மெட்டு.

ராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

அனுமார்.

வில்விநாலே உன்னை கொல்லுவேன் பாரடா
வீரங்கள் பேசாதேடா நர்ம்
மல்லுத்தமாகிலும் செய்குவோ மிரங்கிடு
மயில் ராவணனே மூடா.

மயில் ராவணன்.

கெருடாஸ்த்திர நான் விட்டுமே யருக்குறேன்
கிட்டியே உன் த[illegible]லையை செத்தே
பொருடா வாணாஸ்த்திரம் போடுறேன் மார்பினில்
புண்ணாக தான் வலையா

அனுமார்.

விட்ட யஸ்த்திரத்தை கண்டித்தேன் பாரடா
வீணுப் அழிந்துபோக அட
துஷ்டனே உன்னை நான் அடித்து இப்பாரை
சூட்டியே நானும் யேக.

மயில் ராவணன்.

உத்தத்தில் சேர்ந்த ராமமூர்த்தியோடு
உன்னையும் கொல்லுவேனே நீ
இத்தனை சேனையும் அழித்தோமென்று நீ
எண்ணாதே வெல்லுவேனே

அனுமார்

ஓட்டவழியும் பார்க்குரா உத்தனை
உதைத்து மிதித்திடுவேன் ஆயிரம்
யோசனை தூரம் வணாங்கு வித்தியாசல
உயிர்வண்டை தேய்த்திடுவேன்.

மயில் ராவணன்.

குற்றம் பொருக்கவேணுமே மாருதி
குறைசெய்தேன் ராமனுக்கு தம்மால்
அற்றுமே பாபம் வைகுந்த தர்திடும்
அடியேன் தான் எந்தனுக்கு.

மயில் ராவணன் இரந்தபின் நீலமேகனை அழைத்து மயில் ராவணனுக்கு கிரிகை முதலியவை செய்து வர்ணமாலிகையை கேட்டு ரூபவதியை நீலமேகனுக்கு மணம்செய்து பாதாள லெங்கையை மூடி சூட்டுவது.

சப்த கலந்த மேட்டு.

இந்துஸ்தான.

நீலமேகனுக்கும் ரூபவதிக்கும் நீதியாய்
மணமது முடித்து வைத்தார் வெகு

சீலமான யந்த பாதாள லெங்கையை
செங்கோல் புரிய மாருதிவைத்தார்
பாலனவந் தூறதன்டி தன்மகனும் அவர்
பாதம் பணிந்து நின்றான்
கோலமுடன் ஆசீர்வாதம் கொடுத்து வந்தார். (சீல)

சென்று நான்வாறேன் க்ஷேமமாய் இரும்பீர்
என்றுமே சொல்லி ஏகினாரே
அன்று தன்மகன் மச்சவல்லபனுக்கு
அனேக புத்திசொல்லி போயினாரே
குன்றுதனில் வைத்த ராமன் பெட்டிகொண்டு அங்கு
தண்டு தாமரை வழியாய்
வென்றுவந்த வகையதை தந்தைக்கி சொல்லி (சீல)

லெங்கையில் சுக்கிரீயன் ஜாம்புவன் விபுஷணர்
முதலியவர் இன்னம் ஆஞ்சிநேயர் வரவில்லையே
என வழிபார்த்து இருக்க ராமலட்சுமணரை
எடுத்து லெங்கைக்கி வருவது.

ஆஞ்சிநேயர் ராமர் துதி.

ஆரே-சையா என்ற வர்ண மெட்டு.

இந்துஸ்தான்.

ராமா ராமா ரட்சித்தருள் பூமா
நம்பினேனை கோமா. (ராமா)

சியா சீதையின் மனோகரா
சிறுவன் என்னைக் காரா
சிந்தித்தேன் வரம் தாரா
ஜெயமே யது பாரா.
சிந்தையிலே உந்த நாமம்
எந்தனுக்கு வந்திடவே (ராமா)

அன்னை சொல் மாறா ராமையா
அடியேனை காரையா
அருமை கோதண்ட கையா
அனுதினம் புகழ் மெய்யா
அரிகரியே முரகரியே ஆதரியே நீ கெதியே. (ராம)

மங்களம்.

அச்சாமேரி என்ற வர்ண மெட்டு.

இந்துஸ்தான் தேசிகதோடி தாளம் ஆதி.

ராம நாம மங்களம்
நவின்றோர் தேரேகம் வெங்கலம்
வெங்கலம் சொர்க்க தங்கலம். (ராம)

காமகிர்த லோபங்காணுது நல்ல லாபம்
காக்ஷியே காக்ஷியே கா கா தான் (ராம)

ஜென்ம வினையருக்கும்
கன்மமதை குருக்கும்
தினம் தினம் தினமே. (ராம)

எழுதினோர் படித்தோரும்
இதை அச்சிலிட்டோரும்
எப்போதும் எ எ எ ழும். (ராம)

முற்றிற்று.

வெண்பா.

படித்தோரின் முகங்காணு பாலனுமிப்புத்தகத்தை
முடித்தே யெழுதி முன்னவரே அடித்தலைமகள்
ஏற்குறை இருந்தாலும் தான்பொறுத்து
தீரனை யாளி செய்யும்.

விளம்பரம்.

மன்மத தாதுவிர்த்தி மணிமாத்திரை 12-அடங்கிய டப்பி 1-க்கு	1	0	0
லீலாவதி பரிமளகூந்தல் தயிலம் 2-பவுன் பெட்டி 1-க்கு	1	0	0
ரோமசங்காரி தயிலம் பவுடர் அரைபவுன்ஸ் பெட்டி 1-க்கு	0	8	0
எலட்டிரி தயில் சகல விஷத்துக்கும் அரைபவுன்ஸ் பெட்டி 1-க்கு	0	8	0
குலை பிடிப்புக்கு தயிலம் அரைபவுன்ஸ் பெட்டி 1-க்கு	0	8	0
தந்தம் துலக்கும் சுந்தா பல்பொடி அரைபவுன்ஸ் பெட்டி 1-க்கு	0	4	0
வாசனை சாந்து திலதம் டப்பி 1-க்கு	0	4	0
சிவகிரி வாசனை புகையிலை டப்பி 1-க்கு	0	8	0

இதில் உள்ள சாமான்கள் யாவுக்கும் அந்தந்த டப்பியில் லேட்டல் ஒன்று ஒட்டி இருக்கும் அதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். இதுகளுக்கு வி-பி-சார்ஜ் பிரத்தியேகம் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது விலாசம்,

ராமசந்திர ராவ்.

டையிலர் பெரியகடை வீதி,

கும்பகோணம்.